படிப்பு—இவைகளை மட்டுமே இனி அரசுக் கல்லூரிகளில் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். மன்னார்குடி இராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிய முன்மொழிவுகள் வரப்பெற்றால் பகுதி-2 திட்டத்தில் அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கு ஏற்பவும், தேவைக்கு ஏற்பவும் முன்னுரிமை அடிப்படையிலும் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் போன்ற வகுப்புகள் மட்டும்தான் தொடங்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மன்னார்குடி அரசினர் கலைக் கல்லூரியில் பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயன்ஸ்) ஆரம்பிப்பதற்கு அனுமதி கேட்டு மனு கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வரும் நிதியாண்டில் பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயன்ஸ்) ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி-2 திட்டத்தில் அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கு ஏற்பவும், தேவைக்கு ஏற்பவும் முன்னுரிமை அடிப்படையிலும் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 96, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

96—

தரங்கம்பாடியில் நிலவள வங்கி துவக்குதல்.

*17242— திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி தரங்கம்பாடியில் நிலவள வங்கி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

1993 டிசம்பர் 30]

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடியில் புதிய நிலவள வங்கி திறக்க முடியாவிட்டாலும், பூம்புகார் தொகுதியின் மையமாக விளங்குகின்ற செம்பனார் கோயிலில் திறக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை நிலவள வங்கி தரங்கம்பாடி பகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றது. தரங்கம்பாடி வட்டம் என்பது செம்பனார் கோயில், மேலையூர், திருவிளையாட்டம் மற்றும் தில்லையாடி ஆகிய நான்கு வட்டாரங்களைக் கொண்ட 73 கிராமங்களைத் தன்னுள் அடக்கி இருக்கிறது. தற்போது அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்கள் அவர்களுடைய தேவைகளை மயிலாடுதுறை நிலவள வங்கியிலேயே பெற்று வருகிறார்கள். மயிலாடுதுறை நிலவள வங்கியிலிருந்து கடன் பெறுவதில் அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லை. ஒரு பகுதியில் நிலவள வங்கி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு நபார்டு போன்ற வங்கிகள் சில விதிமுறைகளை வகுத்திருக்கின்றன. போர்டு விதித்துள்ள நெறிமுறைகளின்படி துவக்க உத்தேசித்துள்ள நிலவள வங்கி 70 முதல் 75 இலட்சம்வரை கடன் நிலுவை கொண்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொண்டால்தான் அது வாழ்திறன் தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது. ஒரு புதிய நில வள வங்கியைத் துவக்குவதற்கு முன்பாக, அவ்வாறு அங்கே துவக்குவதற்கு மக்களுடைய தேவை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் தற்போது இயங்கி வரும் நிலவள வங்கியைப் பிரித்து, புதிய நிலவள வங்கியை உருவாக்குவோமானால், அந்தத் தாய் வங்கி தன்னுடைய செயல் தன்மையை இழக்காமல் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் புதிதாக ஒரு வங்கியைத் திறந்தால் 3 முதல் 5 ஆண்டுகள் வரையில் அந்த வங்கிக்கு ஏற்படும் செலவுகளை மாநில அரசே ஏற்க வேண்டி இருக்கும். இந்த சூழ்நிலையில் தரங்கம்பாடியில் புதிதாக ஒரு வங்கியைத் திறக்க எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்பதை

இங்கே உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நலிவடைந்தோர் வாழ்வை வலிவடையச் செய்யும் இறை உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் இன்றையதினம் தரங்கம்பாடியில் நல்ல பணியை நிலவள வங்கி செய்துகொண்டிருக்கிறது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரி வாரி வழங்கும் வள்ளல் இதய தெய்வம் அவர்களுடைய ஆட்சியில் தரங்கம்பாடி வட்டத்தில் கடன் தொகை பெற்றோர் எத்தனை பேர் என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்தோர் வாழ்வை வலிவடையச் செய்ய வேண்டுமென்பதை தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, 1990-91-ல் 21 இலட்சத்து 8 ஆயிரமும், 1991-92-ல் 13 இலட்சத்து 98 ஆயிரமும், 1992-93-ல் மார்ச் மாதம் முடிய 12 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 97, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

97 —

நாகமங்கலம் கிராமத்திற்கு வானொலி மன்றக் கட்டிடம் அமைத்தல்.

* 21338—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி ஆலங்குடி ஊராட்சி நாகமங்கலம் கிராமத்தில் வானொலி மன்றக் கட்டிடமும், வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகமங்கலம் குக்கிராமத்தை உள்ளடக்கிய ஆலங்குடி ஊராட்சியின் நிதி நிலை வளம்பெறும்போது வானொலிப் பெட்டியும், வானொலிக் கட்டிடமும் அமைத்துத் தரப்படும்.